# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,741 — 1959 මැයි 8 වැනි සිකුරාදා — 8.5.1959**

11,741 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

எனது எண்: ஈபீ எ/35/57 (ii).

**ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவைப் பரீட்சை மார்ச், 1958**

1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ம் திகதி வெளியான 11,608 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 1959 ம் ஆண்டு ஏப்ரில மாதம் 9 ம் திகதி வெளியான 11,721 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான அரசாங்க அறிவித்தல்கள் தொடர்பாக, 1958 ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவைப் பரீட்சையில் சித்தியெய்தியதன் காரணமாக கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் இரண்டாம் வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களென்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | | விலாசம் |
|---|---|---|
| எலாரிஸ் அப்பு, டீ. எம். | .. | அலகொலகொல, கட்கம, கலி–எல. |
| குணசேகர, யி. யி. எஸ். | .. | பகத்துவுவ, இனிகத்தெனா |
| பிரேமதாஸ, கே. ஆர். | .. | வெல ரோட், கஸ்கடுவாவத்த, கோனியினுவெல |
| பியதாஸ, என். பி. | .. | அபரெக்க, டியககா, மாத்தறை |
| பியதிலக்க, எஸ். டபிள்யு. | .. | அழகொட, பிற்றிகல |
| ரணசிங்க, எச். ஏ. | .. | பி. யு. குறிக்கடுவ |
| ரத்னபுளிகே, எஸ். | .. | ஏ. எச். குணசேன மேற்பார்த்து, மத்திய கல்லூரி, நாரம்மல்ல |
| சிரிசேன, எஸ். ரி. | .. | டிம்பர் ஸ்ரோஸ், பிந்துனுவேவ, பண்டாரவளை |
| சோமபால, டபிள்யூ. கே. | .. | 63, பத்கம்கொட, பெல்மதுல |
| சொலமன், யே. எம். | .. | கித்தவகிற்றியாவ, யக்வில, வ.ம.மா. |

2. பரீட்சார்த்திகளுக்கு உடனடியாக வேலை கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பல்ல, எனினும், காலித்தானங்கள் ஏற்படும்பொழுது நியமனங்கள் வழங்கப்படும். சகல நியமனங்களும் 3 வருடங்களுக்குப் பரீட்சார்த்த நிலையில் இருக்கும். இவர்கள் ஓர் வைத்திய பரிசோதனைக்கும், ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவை சம்பந்தமான சேவை நிபந்தனைகளுக்கும் உட்படவேண்டியிருக்கும்.

டபிள்யு. ஏ. கருணாரத்ன,
சௌக்கிய சேவை அதிபதி.

சௌக்கியப் பகுதி,
கொழும்பு, மே 2, 1959.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

**14/10 கன அடிப் பிரமாண 25 கொங்கிறீற்றுக் கலக்கும் கருவிகளும் 15 " உவேய் பாச்சேர்ஸ் " (Weigh Batchers) உம் கொள்ளல்**

கேள்விப் பத்திரச் சபாநாயகர், காணி நில அபிவிருத்தி அமைச்சு, தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு, அவர்கள் கீழ்வருவனவற்றைக் கொள்வதற்கான கேள்விப் பத்திரங்களை 1959 ம் ஆண்டு யூன் மாதம் 2 ம் திகதி ஆய செவ்வாய்க்கிழமை காலை பத்து மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளவார்.

| | | |
|---|---|---|
| 14/10 கன அடிப் பிரமாண கொங்கிறீற்றுக் கலக்கும் கருவிகள் | .. | 25 |
| " உவேய் பாச்சேர்ஸ் " (Weigh Batchers) | .. | 15 |

நீர்ப்பாசனத்துறை அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு, அவர்களின் அலுவலகத்தில் கேள்விப் பத்திரம் சம்பந்தமான கடுதாசிகள் பரிசோதனைக்கு உள. விரும்பிய கேள்விப் பத்திரதாரர்கள் நீர்ப்பாசனத்துறை அதிபர், காலிமுகச் செயலகம், கொழும்பு 1, அவர்களுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில், கொழும்புக்குப் புறம்பான எந்தக் கச்சேரியிலேனும் நீர்ப்பாசனத்துறை அதிபருக்கேனும் கேள்விப் பத்திரக் கட்டுப் பணமாக இருநூற்றைம்பது ரூபா (ரூ. 250.00) கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு ஒன்றைச் சமர்ப்பித்தால் மட்டும் கேள்விப் பத்திரம் சம்பந்தமான கடுதாசிகள் வழங்கப் படுவர். கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் கேள்விப் பத்திர நிபந்தனைகளுக்கு அமையத் திருப்பிக் கொடுக்கப் படும்.

மேற் கண்டவாறு பெறப்படும் வெற்றுத்தாள்களிலேயே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 1959 ம் ஆண்டு மே மாதம் 29 ம் திகதி ஆய வெள்ளிக்கிழமை வரைக்கும் கேள்விப் பத்திரம் சம்பந்தப்பட்ட கடுதாசிகள் வழங்கப்படும்.

ரீ. பீ. ஈ. செனெவிரத்ன,
நீர்ப்பாசனத்துறை அதிபருக்காக.

நீர்ப்பாசனத்துறை,
தபாற் பெட்டி இலக்கம் 500,
கொழும்பு, 5.5.1959.

---

### நீர்ப்பாசன இலாகா

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 50,000 க்கும் மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட, கொந்தராத்துக்காரர்களிடமிருந்து, பதவியாத் திட்டத்தில் அத்துனுகே கந்த என்னும் இடத்தில், சுற்று வாடி நிலையம் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்களை வடமத்திய பிரதேச அனுராதபுர, பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர் 27.5.59, காலை 11.00 வரை ஏற்பார்.

2. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். பதவியா நீர்ப்பாசன இஞ்சினியரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மனுதார் இலங்கையராக இலங்கையின் ஸ்தாபனமாக இருத்தல் வேண்டும்.

11.5.59 தொடக்கம் 25.5.59 வரைக்கும், கந்தோர் நேரங்களில் 3.00 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும்.

சி. சி. ரி. பொன்னுத்து,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
பதவியாத் திட்டம்.

நீர்ப்பாசன கந்தோர்,
பதவியாச் சந்தி,
29.4.59.

---

### நீர்ப்பாசன இலாகா

ஊவா மாகாணப் பெரும் பாகம் நீர்ப்பாசன இஞ்சினியர் மொனருகலை உப கந்தோரில் உள்ள கந்தபனுகலத் திட்டத்தில் யந்திரசாலை உத்தியோகத்தருக்கு நிலைவரமற்ற வீடும் பண்டகசாலையும் கட்டுவதற்குரிய கேள்விப்பத்திரங்களை மே மாசம் 20 ம் திகதி, 1959 ம் ஆண்டு காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் மொனருகலை உபகந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். அவை இணைப்பிரதியுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும். அங்கு எல்லா விபரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்துள்ளோருக்கும் கையிருப்பு வேலையில் நற்சாட்சிப்பத்திரம் பெற்றோருக்கும் கச்சேரி அல்லது மொனருகலை உபகந்தோரில் ரூபா 25.00 கட்டி ரசீது பெற்றோருக்கும் மே மாதம் 19 ந் திகதி, 1959 வரை கொடுக்கப்படும்.

கொந்தருத்துக்காரர் ஒவ்வொருவரும் தமது ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திலும் ஒப்பந்தம் செய்துள்ளவற்றின் எண்ணிக்கையும் தாம் பெற்றுக்கொண்ட பத்திரங்களின் எண்ணிக்கையும் குறிக்க வேண்டும்.

**வவுனியா மாவட்டப் பகுதி சிறிய நீர்ப்பாசன வேலைக்கான கேள்விப்பத்திரங்கள்**

கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரவர்களால் 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 2 ம் திகதி, செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**திருத்த வேலைகள்**

வவுனியா தெற்கு காரியாதிகாரி தமிழ்ப் பிரிவு

1. பணிக்கர்புளியங்குளம்
2. சின்னக்குளம் (வாய்க்கால்)
3. மாளிகைக்குளம்

வவுனியா வடக்கு காரியாதிகாரி பிரிவு

4. கறப்புக்குத்திக்குளம்
5. முருகண்டிக்குளம்

காரியாதிகாரி முல்லைத்திவுப் பிரிவு

6. குஞ்சுக்குளம்-முறிப்புப்புவேலை

**சுலுசு கட்டும் வேலைகள்**

வவுனியா தெற்கு காரியாதிகாரி தமிழ்ப் பிரிவு

1. தாணெடிக்குளம்
2. சாம்பல் தோட்டம் குளம்
3. சாலம்பைக்குளம்
4. இடச்சூறிக்குளம்
5. பூவரசங்குளம்
6. ராசேந்திரன்குளம்
7. செக்கடிப்பிலலகுளம்
8. பம்பாய்மடு குளம்-2 பகுதி
9. பாலாமைக்கல்லுக்குளம்
10. கள்ளிக்குளம்
11. மகிளன்குளம்
12. சோபரலபுளியங்குளம்
13. கருங்காலிசின்னக்குளம்
14. கரயார்சாலம்பைக்குளம்
15. பரசங்குளம்
16. தேற்கிலுப்பைக்குளம்
17. ஆரியார்வேலன்குளம்
18. பனிக்கநீராவிக்குளம்
19. பெரியமடுக்குளம்
20. பால மோட்டைக்குளம்
21. வாரியுடையாரிலுப்பைக்குளம்
22. செங்கரத்தை மோட்டைக்குளம்
23. மரையடித்தகுளம்
24. கல்வீரன்குளம்
25. சின்னசிப்பிக்குளம்
26. முதலியாகுளம்

வவுனியா தெற்கு காரியாதிகாரி சிங்களப்பிரிவு

27. பிரப்ப மடுவாக்குளம்
28. ஏரப்பொற்றுணக்குளம்
29. அறுகம்புலி வெலியாகுளம்
30. கலயநுறுவாக்குளம்

காரியாதிகாரி வவுனியா வடக்கு பகுதி

31. வேலன்குளம்
32. ஆரியாமடுக்குளம்
33. இளங்கட்டுக்குளம்
34. நயினாமடுக்குளம்
35. கச்சல் கொடிக்குளம்

காரியாதிகாரி முல்லைத்தீவுப் பிரிவு

36. புதரிக்குட்டாக்குளம்
37. ஆராச்சியமுறிப்புக்குளம்
38. வில்லுவேலிக்குளம்

2. வவுனியா கச்சேரியிலுள்ள நீர்ப்பாசன பகுதியிலிருந்து 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 1 ம் திகதி, பிற்பகல் 3.00 மணிக்கு முன் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கும்பொழுது வவுனியா அரசாங்க அதிபர் அவர்கள் பேரில் ரூபா 25.00 கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச்சீட்டு இணைத்தல் வேண்டும்.

மற்றும் விபரங்கள் வவுனியாக் கச்சேரியில் உள்ள நீர்ப்பாசன பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

டி. எம். ஏ. ஸ்பெல்டவின்,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

வவுனியாக் கச்சேரி,
4.5.59.

---

# நானாவித அறிவித்தல்கள்

## தொற்று நோய் பரவாத் தடைப் பகுதி

**தொற்றுநோய் பரவாத் தடை அனுமதிகள் பற்றிய அறிவித்தல்**

தொற்றுநோய் பரவாத்தடை அனுமதிகள் கொழும்பிலுள்ள தொற்று நோய் பரவாத்தடைக் கந்தோரில் 16.5.59 தொடக்கம் கொடுக்கப்படாதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. புகையிரத வழியாக வருகின்ற எல்லாப் பிரயாணிகளும் தங்கள் சர்வதேச சுகாதார அத்தாட்சிப்பத்திரங்களுடனும் வேறு நிப்ந்தனைகளின் திருப்தியுடனும் இந்தியாவில் இருந்து இலங்கைவர அனுமதிக்கப்படுவார்களென்றும், அவ்வாறு அனுமதிக்கப்படும்போது மண்டபத்தில் ஓர் பிணைப்பத்திரத்தில் ஒப்பமிட்டு மண்டபத்து அத்தியட்சகர் விதித்த பிரகாரம் இலங்கை வந்தடைந்ததும் குறித்த சுகாதார அதிகாரிகளிடம் தங்களைக் காட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

பிணையாக வைப்புப்பணமெதுவும் மண்டபத்தில் கட்டவேண்டுமென்று பிரயாணிகள் கேட்டுக்கொள்ளப்படமாட்டார்கள்.

அதிபர்,
தொற்றுநோய் பரவாத் தடைப் பகுதி.

கொழும்பு, 30.4.59.

---

# விளம்பரம்

1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 21 ந் திகதி வியாழக்கிழமையும், 22 ந் திகதி வெள்ளிக் கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாதலால், இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 20 ந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 16 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஆடு வைகாசி (மே) மீ 5 ந உ.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன் பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. ச. | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 25 | |
| | 0 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 10 | |
| | 0 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் **வேண்டும். கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.**

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது